செய்தி வெளியீடு எண்:919 நாள்:28.11.2020

**<u>இன்று (28.11.2020) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் பாதுகாப்பு மற்றும் கட்டுப்படுத்துதல் நடவடிக்கைகள் குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய தொடக்க உரை:</u>**

அனைவருக்கும் நன்றி கலந்த வணக்கம்.

அண்மையில் நிவர் புயல் ஏற்பட்டபோது, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக என் தலைமையில் தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு மூத்த அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் மற்றும் காவல் துறை தலைமை இயக்குநர் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டு, புயல் ஏற்படும்போது எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டது.

மேலும், தலைமைச் செயலாளர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு அரசு அறிவித்த வழிமுறைகளை, அறிவுரைகளை தவறாமல் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தியதன் விளைவாக நிவர் புயலால் தமிழகத்தில் பெரும் பொருட்சேதமோ, பெரும் உயிர் சேதமோ ஏதும் ஏற்படாமல் பாதுகாக்கப்பட்டது. சிறப்பான முறையில் நடவடிக்கைகள் எடுக்க உதவியாக இருந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். சரியான முறையில், சரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்த காரணத்தினால்தான், இன்றைக்கு தமிழகத்தில் எவ்வித பாதிப்பும் இல்லாமல் மக்கள் பாதுகாக்கப்பட்டனர் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை எல்லாம் அரசால் ஏற்படுத்தப்பட்ட முகாம்களில் தங்கவைத்து, அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தன் விளைவாக அங்கு வசிக்கின்ற மக்களுக்கு எவ்விதத்திலும் பாதிப்பு ஏற்படாமல் அரசு பார்த்துக் கொண்டது. அதேபோல, பாதிப்புக்குள்ளான பகுதிகளை நானும் நேரடியாகச் சென்று பார்த்தேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும்,

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், அந்தந்த மாவட்டத்திலிருக்கிற மாவட்ட அமைச்சர்களும் நேரடியாகச் சென்று மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தனர். அதோடு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், 24 மணி நேரமும் இயங்கக்கூடிய கட்டுப்பாட்டு அறையிலேயே தங்கி, அவ்வப்போது உள்ள நிலவரத்தை எடுத்துச் சொல்லி, மக்கள் பாதுகாப்பாக இருக்கவேண்டுமென்று அறிவுரைகள் வழங்கிய காரணத்தால், இன்றைக்கு தமிழகத்தில் உயிர்சேதமும், பொருட்சேதமும் அதிக அளவில் ஏற்படாமல் பாதுகாத்துள்ளோம். இதற்கு உதவிய அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேவேளையில், தமிழகத்தில் புயல் தாக்குவதை அறிந்தவுடன், மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் தமிழகத்திற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அளிப்பதாகவும், அதற்குத் தேவையான குழுக்களையும் அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்தார், அனுப்பியும் வைத்தார்கள். நேற்றையதினம் இரவு 9 மணியளவில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் நிவர் புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து என்னிடம் கேட்டறிந்தார். அதோடு மத்திய அரசு, தேவையான உதவிகளையும் வழங்குமென்றும் தெரிவித்தார். ஆகவே, நிவர் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும், உள்துறை அமைச்சர் அவர்களும் தேவையான உதவிகள் வழங்கப்படும் என்று அறிவித்தது நமக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

அதோடு, இந்தப் புயல் ஆந்திராவை நோக்கிச் செல்கின்ற போது, வேலூர் மற்றும் ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களில் அதிகமான மழைப் பொழிவு ஏற்பட்டது. அதோடு ஆந்திராவில் கனமழை பொழிந்ததன் விளைவாக, அங்கிருந்து பெண்ணையாறு, பாலாறு, – கௌடண்ய மகாநதி ஆகிய ஆறுகளின் வழியாக அதிக அளவில் தண்ணீர் வந்துகொண்டிருக்கின்றது. அதையும் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சரியான முறையில் கையாண்டு, மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் பார்த்துக் கொண்டதற்கும் அரசின் சார்பாக அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் தாழ்வான பகுதிகளில் வசிக்கின்ற மக்களுக்கு தேவையான உதவிகளை செய்யவேண்டுமென்று அரசு முழுமூச்சோடு நடவடிக்கைகளை எடுத்து

கொண்டிருக்கிறது. வேளச்சேரி, முடிச்சூர், வரதராஜபுரம் மற்றும் தாம்பரம் ஆகிய பகுதிகளில் வெள்ள நீர் தேங்கி குடியிருப்புகளுக்கு பாதிப்பு ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு, இதற்கு நிரந்தர தீர்வு காணுகின்ற உரிய திட்டங்களை வகுக்க அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன். தொடர்ந்து கனமழை பெய்கின்ற போது மேற்குறிப்பிட்ட பகுதிகளில் தண்ணீர் தேங்காமல் இருக்க ஒரு நிரந்தர தீர்வு காண்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது அப்பகுதிகளில் தேங்கியுள்ள நீரை வெளியேற்றுவதற்கு போர்க்கால அடிப்படையிலும், பெருநகர சென்னை மாநகராட்சி, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளில் நீரை வெளியேற்றுகின்ற பணிகளிலும் அரசு அதிகாரிகள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

நிவர் புயலால் ஏற்பட்ட பயிர் சேதத்தை முறையாக கணக்கீடு செய்து பேரிடர் நிவாரண நிதியிலிருந்து விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கிடவும், இதுதவிர, பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுத் தருவதற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். அதேபோல, இந்தப் புயலால் உயிரிழந்த குடும்பத்திற்கும் அரசு நிவாரண உதவி அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புயலால் கால்நடைச் செல்வங்கள் இறந்திருக்கின்றன, அதற்கும் உரிய இழப்பீட்டுத் தொகை உரியவர்களுக்கு வழங்கப்படும்.

'இந்தியா டுடே' பத்திரிகை ஒரு ஆய்வு மேற்கொண்டு, தொடர்ந்து மூன்றாண்டுகளாக சிறப்பாக செயல்படும் பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது என்று அறிவித்திருக்கின்றது. அதில் அனைவருக்குமான உள்ளடங்கிய வளர்ச்சி விருது (Inclusive development) பெரிய மாநிலங்களில் ஒட்டுமொத்த சிறந்த செயல்பாட்டிற்கான விருது நமக்கு அளித்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு உயர் அலுவலர்கள், அரசு பணியாளர்கள் ஆகிய அனைவருடைய ஒட்டுமொத்த முயற்சியின் காரணமாகத்தான் தமிழகம் முதலிடம் பெற்றது. இந்த விருதுகளை பெறுவதற்காக பாடுபட்ட அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கொரோனா வைரஸ் தொற்று சீனாவில் கண்டறியப்பட்டவுடன் மாண்புமிகு அம்மாவின் அரசால் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. முன்னெச்சரிக்கையாக மருந்துகள் கொள்முதல் செய்ய பணி ஆணையும், மருத்துவ உபகரணங்களான N95 முகக்கவசங்கள், மூன்று மடிப்பு முகக்கவசங்கள், PPE முழு உடல் கவசங்கள் போன்றவை வாங்குவதற்கு பணி ஆணையும் வழங்கப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டன. அதோடு, மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அடங்கிய 12 ஒருங்கிணைப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அதற்கென்று பணிகள் வழங்கப்பட்டு, அந்தக் குழுக்களில் இடம்பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் சிறப்பான முறையில் பணியாற்றிய காரணத்தினால் தான் இன்றைக்கு தமிழகத்தில் வளர்ச்சி குன்றாமல் தேசிய அளவில் நாம் முதன்மையாக விளங்கிக் கொண்டிருக்கிறோம். அதோடு, கொரோனா வைரஸ் பரவல் குறைவதற்கும் அவர்கள் உதவிகரமாக இருந்தார்கள். அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல மருத்துவ வல்லுநர் குழு அமைத்தோம். அந்த வல்லுநர் குழு அவ்வப்போது அளித்த ஆலோசனைகளின் அடிப்படையில் நாம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்த காரணத்தால் கொரோனா வைரஸ் பரவல் குறைந்து, இன்றைக்கு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றோம்.

கொரோனா வைரஸ் தடுப்புப் பணி குறித்தும், மாண்புமிகு அம்மாவின் அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் ஆலோசனைகள் வழங்குவதற்கு எனது தலைமையில், 12 முறை அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆய்வுக் கூட்டங்கள் காணொலிக் காட்சி மூலம் நடைபெற்றன. அதேபோல, 10 முறை மருத்துவ வல்லுநர்களுடன் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. தலைமைச் செயலாளர் அவர்களுடைய தலைமையில் 13 முறை மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய ஆலோசனைக் கூட்டங்கள் காணொலிக் காட்சி மூலம் நடைபெற்றது. இவ்வாறு ஒவ்வொரு மாதமும் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தி, மருத்துவ வல்லுநர்கள் தெரிவிக்கின்ற ஆலோசனைகளை மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவித்து, மாவட்ட நிர்வாகமும் அதனை பின்பற்றியதன் காரணமாக, கொரோனா வைரஸ் பரவல் தமிழகத்தில் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. அதேபோல, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள்

தெரிவிக்கின்ற கருத்துக்களை அரசு கவனமாக பரிசீலித்து, தேவையான தளர்வுகளுடன் பொது முடக்கம் மிகவும் கவனமாகவும், பாதுகாப்பாகவும் அமல்படுத்தப்பட்டது.

கோவிட் நோய் தொற்று கட்டுப்பாடு, சிகிச்சை மற்றும் நிவாரணப் பணிகளுக்காக மாண்புமிகு அம்மாவின் அரசால் தேவையான அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக இதுவரை அரசு செலவிட்ட தொகை ரூபாய் **7,525.71** கோடியாகும். நோய்க் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கபசுரக் குடிநீர், இரண்டு வேளைகளிலும் கிருமி நாசினி தெளிப்பு, தூய்மைப் பணிகள் மேற்கொள்ளுதல், நடமாடும் மாதிரி சேகரிப்பு வாகனங்கள் மூலம் கொரோனா பரிசோதனை மாதிரிகள் சேகரித்தல் என பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதன் விளைவாக கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. வல்லுநர் குழுவின் பரிந்துரைப்படி இரத்தக் கொதிப்பு, இதய நோய், சிறுநீரக பாதிப்பு, புற்றுநோய் போன்ற நோய் பாதிப்புள்ள மக்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள், முதியோர் ஆகிய நோய்த் தொற்றினால் எளிதில் பாதிக்கக்கூடிய நபர்களுக்கு கொரோனா தொற்று பரவாமல் தடுக்க களப்பணியாளர்கள் வீடு, வீடாகச் சென்று, அவர்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, நோய்த் தொற்று உள்ளவர்களை மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்து குணமடையச் செய்ததன் வாயிலாக நோய்ப் பரவல் குறைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் இதுவரை **5,22,530** காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு, **2,79,36,147** நபர்கள் கலந்துகொண்டு பயனடைந்திருக்கிறார்கள். இதில், **11,46,363** நபர்களுக்கு காய்ச்சல் கண்டறியப்பட்டது. இவ்வாறு, காய்ச்சல் முகாம்கள் நடத்தியதன் விளைவாக வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் உள்ளவர்களைக் கண்டறிய முடிந்தது. அத்துடன், விளம்பர கையேடுகள் மூலம் இரத்தக் கொதிப்பு, இதயநோய், சிறுநீரக பாதிப்பு போன்ற நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அறிவுரைகளை வழங்கி, அதனை வீடு, வீடாகக் கொண்டு சேர்க்கப்பட்டதன் விளைவாகவும் இந்நோய்ப் பரவல் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த நோய் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிய மருத்துவம் சார்ந்த செலவினம் **1,983** கோடி ரூபாயும், நிவாரணம் சார்ந்த செலவினம் **5,389** கோடி ரூபாயும்

ஆகும். அனைத்து மாவட்டங்களிலும் காய்ச்சல் முகாம்கள் தொடர்ந்து நடத்தியும், வீடு வீடாகச் சென்று காய்ச்சல் மற்றும் வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் உள்ளவர்களைக் கண்டறிந்தும், RT-PCR சோதனை, தனிமைப்படுத்துதல், சிகிச்சை அளித்தல் போன்றவை தொடர்ந்து நடைபெற்ற காரணத்தினாலும் இன்றைக்கு நோய்ப்பரவல் படிப்படியாக குறையத் தொடங்கியிருக்கிறது.

தமிழகத்தில் 220 ஆய்வகங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதில் 67 அரசு ஆய்வகங்களும், 153 தனியார் ஆய்வகங்களும் இடம் பெற்றுள்ளன. இவ்வாறு, இந்நோயைக் கண்டறிய இந்தியாவிலேயே அதிகளவில் ஆய்வகங்களை ஏற்படுத்தியதும் அம்மாவின் அரசுதான். இதுவரை RT-PCR பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 1.18 கோடி. தற்போது நாளொன்றுக்கு சுமார் 70,000 நபர்களுக்கு RT-PCR பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. அதிகபட்சமாக நாளொன்றுக்கு 95,000 நபர்களுக்கு RT-PCR பரிசோதனை செய்துள்ளோம். இவ்வாறு, அதிகளவில் RT-PCR பரிசோதனை மேற்கொண்டதன் விளைவாக நோய்ப் பரவல் குறைக்கப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களில் இந்தளவு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை என்ற தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது. மொத்த பரிசோதனையில் 76 விழுக்காடு அரசு பரிசோதனை நிலையங்களில் செய்யப்பட்டன. பிற மாநிலங்களில் பரிசோதனைகள் குறைந்தபோதும், தமிழ்நாடு அரசு அந்தப் பரிசோதனைகளின் எண்ணிக்கையை குறைக்காமல் இதுவரை தொடர்ந்து முழுமூச்சுடன் செய்து வருகிறது.

கொரோனா வைரஸ் அதிகமாக இருந்த காலக்கட்டத்தில் வேளாண்மைத் துறை மற்றும் உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மூலம் வீடு, வீடாகச் சென்று மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள், காய்கறிகள் போன்ற அத்தியாவசியப் பொருட்களை வழங்கப்பட்டு, பொதுமக்களுக்கு எவ்வித சிரமமும் ஏற்படாமல் அரசு பார்த்துக் கொண்டது.

மாநில அளவில் கோவிட் மருத்துவமனைகளிலும், கோவிட் சிறப்பு மையங்களிலும் 1,41,527 படுக்கைகளும், இதில் ஆக்சிஜன் வசதிகளுடன் கூடிய 34,714 படுக்கைகளும், ICU வசதி கொண்ட 7,697 படுக்கைகளும், 6,517 வென்டிலேட்டர்களும்

பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக அரசால் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

கோவிட் நோய் தொற்றுக்கான சிறப்பு சிகிச்சை அளிக்க, மருத்துவர்கள், செவிலியர்கள், பிற மருத்துவப் பணியாளர்கள் எனக் கூடுதலாக 15,000 மருத்துவ பணியாளர்கள் பணி நியமனம் செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உயிர்காக்கும் உயரிய மருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டு, மாவட்ட அளவில் மருத்துவமனைகளில் போதுமான அளவு கையிருப்பில் உள்ளது. கோவிட் நோய்க்கு சிறப்புச் சிகிச்சை அளிக்க கூடுதலாக மிகவும் இன்றியமையாத மற்றும் உயிர்காக்கும் மருந்துகளான டொஸிலிசுமாப் (Tocilizumab) 400 எம்ஜி, ரெம்டெஸ்விர் (Remdesvir) 100 எம்ஜி, இனாக்சபெரின் (Enoxaparin) 40 எம்ஜி போன்றவை கொள்முதல் செய்யப்பட்டு, அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. மருந்துகள், பரிசோதனைக் கருவிகள், N95 முகக்கவசங்கள், பாதுகாப்பு உடைகள் (PPE Kits), மும்முடி முகக்கவசங்கள், CT ஸ்கேன், X-ray இயந்திரங்கள் ஆகியவற்றை தேவையான அளவில் தொடர்ந்து கொள்முதல் செய்து, நோய் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய முறையில் சிகிச்சை அளிப்பதற்கு அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

களப்பணியில் உள்ள அனைத்து பணியாளர்களுக்கும், கட்டுப்பாட்டு பகுதிகளில் வாழும் மக்களுக்கும், ஜிங்க் (zinc) மற்றும் வைட்டமின் மாத்திரைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த நோய் மேலாண்மைக்காக அலோபதி மருத்துவத்துடன் – இந்திய முறை மருத்துவ (Ayush) சிகிச்சை – நோய் எதிர்ப்பு சக்தியினை அதிகரிப்பதற்காக சித்த மருந்தான கபசுர குடிநீர் பெரும்பான்மையான மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு முழுவதும், ஒரு மருத்துவர், ஒரு செவிலியர் மற்றும் ஒரு உதவியாளருடன் 2,000 Mini Clinic துவங்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, டிசம்பர் மாதம் 15–ஆம்**

**தேதிக்குள் Mini Clinic தொடங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் ஒவ்வொரு மண்டலத்திற்கும் மாண்புமிகு அமைச்சர்கள், சிறப்பு அதிகாரிகள், கூடுதலாக களப் பணியாளர்கள் நியமித்தது, காய்ச்சல் சிறப்பு முகாம்கள் நடத்தியது, ஏழை மக்கள் வாழும் பகுதிகளில் மறுமுறை உபயோகிக்கத்தக்க முகக்கவசங்கள் வழங்கியது, அப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு தனிமைப்படுத்தும் வசதி இல்லாதிருந்தால், அவர்களுக்கு அவ்வசதியை அரசு மையங்களில் ஏற்படுத்தி, 1000 ரூபாய் நிவாரணத் தொகை வழங்கியது, தேவையான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியது போன்ற பணிகள் அம்மாவின் அரசால் மேற்கொள்ளப்பட்டன.

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி, திருமழிசைக்கு மாற்றப்பட்டு, இந்நோய்ப் பரவல் படிப்படியாகக் குறைந்தவுடன் மீண்டும் கோயம்பேட்டிலேயே செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

**மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக தமிழகத்தில் நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகளை கேட்டறிந்ததோடு, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் சிறந்த முறையில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவல் தடுப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளது என்றும் பாராட்டினார். அதுமட்டுமல்லாமல், மற்ற மாநிலங்களுக்கு தமிழ்நாடு ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது என்ற செய்தியையும் தெரிவித்தார். அதற்காக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.**

பண்டிகை காலங்கள், திருமணம் உள்ளிட்ட நிகழ்வுகளில் முகக்கவசங்களை பொதுமக்கள் தவறாமல் அணிதல் மற்றும் அரசு அறிவித்த அறிவிப்புகளை பின்பற்றாதவர்கள் மீது அபராத விதிப்பு போன்ற நடவடிக்கைகளாலும் இந்நோய்த் தொற்றுப் பரவல் குறைக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் வெளியில் செல்லும்போது கண்டிப்பாக முகக்கவசம் அணிய வேண்டும். ஏனென்றால், இவற்றை பல்வேறு மாநிலங்களில் சரிவர கடைபிடிக்காத காரணத்தால் நோய்ப் பரவல் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ஆனால்,

தமிழ்நாடு அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்ததன் மூலமாகவும், அம்மாவின் அரசு அறிவித்த அறிவிப்புகளை மாவட்ட நிர்வாகம் சரியாக கடைபிடித்ததன் மூலமாகவும், பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்கியதன் மூலமாகவும் இந்நோய்ப் பரவல் குறைக்கப்பட்டுள்ளது. இது மேலும் குறைந்து இயல்பு நிலை திரும்புவதற்கு அரசால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று அன்போடு மீண்டும், மீண்டும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். பொதுமக்களின் முழு ஒத்துழைப்பு இருந்தால்தான் நோய்ப் பரவல் முழுவதும் தடுக்கப்பட்டு இயல்பு நிலைக்கு திரும்ப முடியும்.

நோய்த் தொற்று பரவல் நிலையைப் பொறுத்தவரை, மாண்புமிகு அம்மா அரசு எடுத்த நடவடிக்கைகள் காரணமாக நோய்த் தொற்று பரவல் குறைக்கப்பட்டிருந்தாலும், இயல்பு நிலை திரும்புவதற்கு சற்று கால அவகாசம் தேவைப்படுகிறது. இதுவரை நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் 7,77,616 நபர்கள், குணமடைந்து வீடு திரும்பியவர்கள் 7,54,826 நபர்கள், தற்போது சிகிச்சை பெற்று வருபவர்கள் 11,109 நபர்கள், இறப்பு விகிதம் 1.5%. அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கோவிட் நோய் சிகிச்சை குறித்த நிலையான வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசால் பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்கள் நியாய விலைக் கடைகளின் மூலமாக வழங்கப்பட்டதால், பொதுமக்கள் அந்தச் சிரமத்திலிருந்து மீட்கப்பட்டார்கள். அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூபாய் 1,000 வழங்கப்பட்டது. 17 அமைப்பு சாரா நல வாரிய தொழிலாளர்கள், 14 நல வாரிய தொழிலாளர்கள் மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்கள், என 35.65 லட்சம் தொழிலாளர்களுக்கு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் 2000 ரூபாயும், 13.35 லட்சம் மாற்றுத் திறனாளிகளுக்கு 1000 ரூபாயும் அம்மாவின் அரசால் வழங்கப்பட்டது.

கொரோனா வைரஸ் ஏற்பட்ட காலத்திலே, அம்மா உணவகத்தின் மூலமாக நாளொன்றுக்கு 8 லட்சம் பேருக்கு உணவு அளித்தோம். ஆகவே, அப்படி பாதிக்கப்பட்ட நேரத்தில் அம்மா உணவகத்தின் மூலமாக ஏழை மக்களுக்கு உணவு வழங்கி பசியை

போக்கிய அரசு அம்மாவின் அரசு. அதற்காக அம்மா உணவகத்தில் பணிபுரிந்த அனைவருக்கும் அரசின் சார்பாக நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, சமூக உணவுக் கூடங்கள் மூலமாகவும் நாங்கள் உணவு தயாரித்து வழங்கினோம். முதியவர்களுக்கு, மாற்றுத்திறனாளிகளுக்கு, நோய்வாய்ப்பட்டவர்களுக்கு எல்லாம் வீடு தேடிச் சென்று உணவை வழங்கினோம். இப்படி ஒரு சோதனையான காலத்திலே அம்மாவுடைய அரசு மக்களுக்கு உதவிகரமாக இருந்தது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இன்றையதினம், சென்னையில் நடமாடும் அம்மா உணவகம் ஏற்படுத்தப்பட்டு, ஏழை எளிய மக்கள் எங்கெங்கு எல்லாம் இருக்கிறார்களோ, அந்தப் பகுதிகளுக்கே சென்று உணவு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதற்காக 3 வாகனங்கள் இயக்கப்பட்டு வருகின்றன என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

கொரோனா வைரஸ் தொற்று இருந்த அந்த சோதனையான நேரத்தில் கூட, தமிழகத்திலே தொழில் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக 55 புதிய தொழில் திட்டங்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன. அதன்மூலமாக 40,718 கோடி ரூபாய் தொழில் முதலீட்டை நாம் ஈர்த்திருக்கின்றோம். 74,212 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குவதோடு, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், தமிழ்நாட்டை போல் பிற மாநிலங்கள் செயல்பட வேண்டும் என்ற பாராட்டையும் நாம் பெற்றிருக்கின்றோம்.

இந்த சோதனையான நேரத்தில் மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கி தர வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே, புதிய தொழிற்சாலைகள் தமிழகத்திற்கு வருவதற்கு முழு முயற்சி எடுத்துக் கொண்ட இத்துறையைச் சேர்ந்த செயலாளர் அவர்களுக்கும், அனைத்து அலுவலர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு கடனுதவி வழங்கி அந்த தொழில் சிறக்க நடவடிக்கை எடுத்த மத்திய அரசிற்கு எனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசின் MSME நிறுவனங்களுக்கு கடனுதவி வழங்கும் திட்டத்தின் வாயிலாகவும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் செய்பவர்களுக்கு கடன் கிடைக்கப் பெற்றுள்ளது.

கொரோனா காலத்திலும் 3 லட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுமார் 11,620 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டு, சாதாரண ஏழை எளிய குடும்பத்திலே இருக்கின்ற பெண்கள் சுயமாக தொழில் துவங்குவதற்கு கடன் வழங்கி அவர்களுடைய பொருளாதாரத்தை மேம்பாடு அடையச் செய்தோம். அவர்களது குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு, அம்மாவுடைய அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, அவர்கள் எவ்வித பாதிப்புக்கும் ஆளாகாமல் பொருளாதார மேம்பாடு அடைவதற்கு அம்மாவுடைய அரசு வங்கி இணைப்பு கடன் வழங்கியது என்ற செய்தியையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் தொடர்ந்து 6–வது முறையாக தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. அதற்கான விருதையும் நாம் பெற்றிருக்கின்றோம். இதற்காக நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்த துறையைச் சேர்ந்த செயலாளர் அவர்களுக்கும், அவர்களோடு இணைந்து பணியாற்றிய அனைத்து மருத்துவர்களுக்கும், மருத்துவ துறையை சேர்ந்த அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், நன்றியையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

தேசிய அளவில் நீர் மேலாண்மை பணியில் தமிழ்நாடு அரசு சிறந்து விளங்கியதற்காக மத்திய அரசு தேசிய விருதை நமக்கு வழங்கியிருக்கிறது. ஆகவே, தேசிய அளவிலே நீர் மேலாண்மை திட்டத்தில் முதன்மை வகிப்பதும் தமிழ்நாடு அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். அதற்காக பாடுபட்ட பொதுப்பணித் துறை செயலாளர் அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய

பொறியாளர்களுக்கும், அத்துறையில் பணியாற்றும் அனைத்து அரசு பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், நன்றியையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு அம்மாவுடைய அரசை பொறுத்தவரைக்கும், கொரோனா வைரஸ் தொற்று பரவலை தடுப்பதற்காக நாம் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக இன்றைக்கு தொற்று பரவல் படிப்படியாக குறைந்து, கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருக்கின்றோம். இப்பொழுது 1500 நபர்களுக்கும் குறைவாக நோய் தொற்று ஏற்பட்டவர்களுடைய நிலையை நாம் பார்க்கின்றோம். இறப்பவர்களுடைய சதவிகிதம் மிக மிக குறைவாக இருக்கின்றது. ஆக, இப்படி மாண்புமிகு அம்மாவுடைய அரசு எடுத்த நடவடிக்கைக்கு பக்கபலமாக விளங்கிய அனைத்து அரசு உயர் அலுவலர்களுக்கும், அதற்கு ஒத்துழைப்பு நல்கிய பொதுமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்து, உரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி, வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**